விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 03 திங்கட்கிழமை (16.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 118

ராம்கோ

RAMCO

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான புதிய முயற்சிகள் இடம்பெறவில்லை

### போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு புதிதாக எந்த முயற்சிகளும் ஆரம்பிக்கப்படவில்லை என இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

புதிதாக இங்கு ஒன்றும் இல்லை. கடந்த வாரம் விடுதலைப்புலிகளை நாம் சந்தித்த போது புதிய அணுகுமுறைகளோ அல்லது புதிய திட்டங்களோ விவாதிக்கப்படவில்லை. அது ஒரு வழமையான சந்திப்பு என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கண்காணிப்புக் குழுவினர் கிளிநொச்சியில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் வலையமைப்புத் தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுத்துறை தகவல் சேகரிப்பு

(புதுடில்லி)

வெளிநாடுகளிலுள்ள விடுதலைப்புலிகளின் வலைப் பின்னல் தொடர்பான விபரங்களை இந்திய மத்திய புலனாய்வுத்துறை சேகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மனி, சுவிஸ்லாந்து, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் உட்பட உலகின் 17 நாடுகளிலுள்ள விடுதலைப்புலிகளின் வலைப் பின்னல்கள் மற்றும் தொடர்பாடல் குறித்தே தகவல் சேகரிக்கப்படுகின்றது.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்குப் பற்றி இறுதிக் கட்ட விசாரணைகள் மேற்கொள்ளும் குழுவினரே இந்தத் தகவலை சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

விடுதலைப்புலிகள் பற்றிய தகவலை வழங்க பல நாடுகள் மறுத்திருப்பதுடன் தமது தகவல்களை இந்திய அரசு தவறாகப் பயன்படுத்த முடியும் எனவும் அந்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

தகவல்களை (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என யாழ்.பொலிஸ் நிலையம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் இரவு 7 மணிதொடக்கம் அதிகாலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும்எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## பேச்சுவார்த்தைக்கு அரசு எந்நேரமும் தயார்

### ஹெகலி ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புக்கு எதிரான செயற்பாடு தொடருமாயின் அதற்குப் பதில் வழங்கும் உரிமையும் பொறுப்பும் அரசாங்கத்திற்குள்ளதாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்துடன்அரசாங்கம் எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவுள்ளது என்றும் அவர் கூறினார்.நோர்வே அனுசரணையாளர்கள் ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்கு வழங்கிய (04 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துலக கண்காணிப்புக் குழுவைத் தொடர்ந்து

# ஐ.நா.படைகள் இலங்கை வரும்

## அரசியல் இராஜதந்திரிகள் ஆரூடம்

(கொழும்பு)


**இலங்கையில் இடம்பெறும் ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு அனைத்துலக கண்காணிப்புக் குழுவை அனுப்ப வேண்டும் என்பதன் இறுதி முடிபு ஐ.நா.படைகளை இலங்கைக்கு அனுப்புவதாகவே அமையும்.**

(04 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக கடற் பாதுகாப்பிற்கு மேலும் ஒன்பது ராடர்கள்

# மேலும் ஒன்பது ராடர்கள்

## விமான எதிர்ப்பு பீரங்கிகள் அடங்கிய இரண்டு போர்க் கப்பல்களும் வருகை




(சென்னை)

தமிழகக் கடற்பிராந்தியத்தில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கும் இந்தியா,இப் பகுதியில் மேலதிகமாக ஒன்பது நவீன ராடர்களை விரைவில் பொருத்தவுள்ளது. அத்துடன் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் அடங்கிய இரண்டு போர்க் கப்பல்களையும் மேலதிகமாக பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

ஏற்கனவே இப்பகுதியில் எட்டு நவீன ராடர்கள் பொருத்தப்பட்டிருக்கும் நிலையிலேயே மேலதிகமாக ஒன்பது நவீன ராடர்களைப் பொருத்தி தீவிர கடற்கண்காணிப்பை மேற்கொள்ள இந்தியா திட்டமிட்டிருக்கின்றது.

இதைவிட அதிநவீன கடற்படைத் தளம் ஒன்றையும் இப் பகுதியில் அமைத்து தீவிரவாத செயற்பாடுகளுக்கும் அந்நியர்களின் ஊடுருவலுக்கும் முட்டுக்கட்டை போட திட்டமிட்டிருப்பதாக தமிழகக் கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீது விமானத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே தமிழகக் கரையோரங்களில் நவீன ராடர்களை இந்திய அரசு (04 ஆம் பக்கம் பார்க்க)

## மங்களவை மீண்டும் இணைக்க ஜனாதிபதி மகிந்த விருப்பம்

(கொழும்பு)

அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட மங்கள சமரவீரவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேசக்கரம் நீட்டுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம்ஒன்றில் வெளியான செய்தியில், தேசிய புதுவருட நல்லெண்ண முயற்சியாகவும் மீண்டும் தமது நட்பைப் புதுப்பிக்கும் முயற்சியாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருக்கு இடையிலான சமரச முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வெளிநாடு ஒன்றில் தங்கியுள்ள மங்களவுக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் புத்தாண்டுடன் முனைப்புப் பெறும்

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

புத்தாண்டுக்குப் பின் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் பாரியளவில் முன்னெடுத்துச் செல்லப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பொருள்களின் விலை அதிகரிப்பு, தொடரும் ஆட்கடத்தல் சம்பவங்கள் மற்றும் சமாதானத்திற்கு எதிரான அரசாங்கத்தின் அணுகுமுறை என்பவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் இதற்குப் பதிலளிக்கும் வகையில் அரசாங் (04 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## நியூசிலாந்து வெற்றி தென்னாபிரிக்கா பரிதாபம்

நியூசிலாந்திடம் 5 விக்கெட்டுக்களால் தோல்விய டைந்தது தென்னாபிரிக்க அணி. மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் கிரேனடாவில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் நியூசிலாந்து-தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் முத லில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, நியூசிலாந்து வேகப்பந்து வீச்சு கூட்டணியின் துல்லியமான பந்து வீச்சில் நிலை குலைந்து 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கேர்ஸல் கிப்ஸ் 60 ஓட்டங்களையும் அஸ் வெல் பிறின்ஸ் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக கிரேக் மக்மிலன் 3 விக்கெட்டுக்களையும் சேன் பொன்ட் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 50 ஓவர்களில் 194 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத் தாடிய நியூசிலாந்து அணி 48.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ஸ்கொட் ஸ்ரைரிஸ் 56 ஓட்டங்களையும், மக்மிலன் ஆட்ட மிழக்காமல் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அன்ரூ நெல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி னார். இப் போட்டியின் நாயகனாக நியூசிலாந்து அணியின் மக்மிலன் தெரிவானார். (ந-5)

## அரையிறுதிக்குத் தகுதிபெற தென்னாபிரிக்கா-இங்கிலாந்து கடும்போட்டி

மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் தற்போது சூப்பர்-8 ஆட்டங் கள் இடம் பெற்று வருகின்றன. இதில் நடப்புச் சம்பிய னான அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் தலா 10 புள்ளிகளைப் பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற் றுள்ளன.

இலங்கை அணி எட்டுப் புள்ளிகளைப் பெற்று விட்டு அவுஸ்திரேலியா, அயர்லாந்து அணிகளுடன் மோதவுள் ளது. அரையிறுதிக்கு நுழையவுள்ள நான்காவது நாடு எது என்பதே கேள்வி.

நியூசிலாந்திடம் நேற்று முன்தினம் தோல்வியடைந்த தென்னாபிரிக்கா கடும் நெருக்கடியில் உள்ளது. ஒரே ஒரு ஆட்டம் தான் அந்த அணிக்கு உள்ளது. இங்கி லாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் வென்றால் மாத் திரமே அரையிறுதிக்குத் தகுதிபெற முடியும்.

இந்த ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இங்கி லாந்து அணி நான்கு புள்ளிகளுடன் உள்ளது. அவ் அணிக்கு இரண்டு ஆட்டங்கள் உள்ளன. அதில் ஒன்று தென்னாபிரிக்கா மற்றையது மேற்கிந்தியத்தீவுகள் அணி. இங்கிலாந்து, தென்னாபிரிக்காவுடன் வெற்றி பெற்று மேற்கிந்தியத்தீவுகளிடம் தோல்வியடைந் தால் ஆறு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும். தென்னாபிரிக்காவும் அதே புள்ளியுடன் இருக்கும்.

மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து அணிகளை வெற்றி பெற்றால் ஆறு புள்ளிகளைப் பெறும். இதனால் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய அணிகள் சம புள்ளிகளுடன் இருப்பதால் ஓட்ட சராசரியில் அரையிறுதிக்கு ஒரு நாடு தெரிவாகும்.

இதில் தற்போது தென்னாபிரிக்கா கூடிய ஓட்ட சராசரியில் உள்ளது. இதேவேளை பங்களாதேஷ் அணி நேற்று நடைபெற்ற அயர்லாந்துடனான போட்டியிலும் மேற்கிந்தியத்தீவுகளை வெற்றி பெற்றால் ஆறு புள்ளிகளைப் பெற்று வாய்ப்பில் இருக்க முடியும்.

எது எவ்வாறோ நாளை நடைபெறவுள்ள இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகளுக்கிடை யிலான போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றுவிட்டால் அடுத்து வரும் நான்கு ஆட்டங்கள் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. (ந-5)




## ரூ.3 கோடி மதிப்புள்ள ஹெரோயின் கடத்தல்

### சென்னை விமான நிலையத்தில் திருமலை நபர் கைது

(சென்னை)

சென்னையில் இருந்து இலங்கைக்கு ரூ.3 கோடி மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருளை கடத்த முயன்ற ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். இது பற்றி மேலும் தெரியவருவதாவது, திருகோணமலையைச் சேர்ந்த பாஸ்கரன் என்பவர் சென்னை விமான நிலையத்தில் இருந்து இலங்கை செல்லும் விமானத்தில் பயணம் செய்ய விருந்தார்.

இந் நிலையில் மத்தியப் போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து விமான நிலையத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் போதைப் பொருளுடன் பாஸ்கரன் விமானத்தில் இருப்பதாக சுங்கத் துறையினருக்குத் தகவல் கொடுத்தனர்.

தகவலையடுத்து விமானத்தில் பாஸ்கரனின் பயணம் ரத்து செய்யப் பட்டது. அவரைப் பொலிஸார் விமானத்தில் இருந்து கீழே இறக்கி விசா ரித்தனர். அவர் வைத்திருந்த பையைச் சோதனையிட்டனர். அதில் 3 கிலோ எடையுள்ள ஹெரோயின் இருப்பது தெரியவந்தது. இதன் சர்வ தேச மதிப்பு ரூ.3 கோடியாகும். போதைப் பொருளைக் கடத்துவதற்கு உடந் தையாக இருந்த சந்தேகத்தின் பேரில் அண்ணாநகரைச் சேர்ந்த ஒரு வரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-5)

### வசதியான பாடசாலைகளில் ஓ.எல்.சித்தியடைந்த மாணவர்கள்

## கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் உயர்தரம் கற்பதற்குத் தடை

(கொழும்பு)

வசதியுடைய மாவட்டங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் கஷ்டபிரதேச பாடசாலைகளில் உயர் தரக் கல்விச் செயற்பாடுகளிற்கு விண்ணப்பிக்க முடியாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்விதம் செய்வது சட்டவிரோதமானது எனவும் இவ்வாறான இட மாற்றங்கள் குறித்து அமைச்சு மிகுந்த அவதானத்துடன் இருப்பதாகவும் தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக அனுமதியை இலகுவில் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாணவர்கள் கஷ்ட பிரதேசங்களில் கல்விப் பொதுத் தராதர உயர் தர பரீட்சைக்கு தோற்றும் தந்திரோபாயங்களை பயன்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதனால் பிரதேச ரீதியாக பல்கலைக்கழக மாணவர்கள் அனுமதியில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். விஷேட சந் தர்ப்பங்களை தவிர வசதியுடைய பிரதேச பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களை கஷ்ட பிரதேச பாடசாலைகளுக்கு அனுமதிப்பதில்லை எனவும் தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## வட மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குமாறு கோரிக்கை

(திருகோணமலை)

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்குமாறு கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் வட மாகாண ஆளுநர் ஊடாக கல்வி அமைச்சரிடம் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

முன்னர் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த போது விடுக் கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் தற்போது கிழக்கு மாகாணத்தில் கல்வி அமைச்சினால் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நிய மனங்கள் வழங்கப்படுகின்றன.

எனினும் வட மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் உதவி யாளர் நியமனங்கள் வழங்கப்படாமையை அடுத்தே இக் கோரிக்கையை தாம் விடுத்துள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். இளங்கோவன் வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார். வட மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்கள் மிக விரைவில் வழங்கப்படுமென தான் நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார். (ந-5)

## மலையக மாணவர்களை வடக்கு-கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப வேண்டாம்

### பிரதியமைச்சர் எம்.சச்சிதானந்தன் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் போர்ச்சூழல் நிலவுவதன் காரணமாகவும் அங்கு செல்வதற்கு போக்குவரத்துப் பிரச்சி னைகள் இருப்பதாலும் மலையக மாணவர் களை வடக்குக் கிழக்கு பல்கலைக்கழகங் களில் அனுமதிக்க வேண்டாம் என்றும் அவர் களை நாட்டின் பிற பல்கலைக்கழகங்களில் சேர்க்கலாம் என்று பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்துள் ளார்.

இது குறித்து இலங்கையின் உயர் கல் விக்கான பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா விடம் கேட்டபோது, வடக்கு கிழக்குப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று படிக்க தம்பிள்ளை களை அனுப்ப பெற்றோர்கள் பலர் தயங்கு வதாகக் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகத்துக்குள் படைகளைக் குவிக்கமுடியாது என்று தெரிவித்த அமைச் சர் இது தொடர்பான இறுதி முடிவை அரசுதான் எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். (ந-5)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசி ஏற்றல்

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது. இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சுகாதார வைத் திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள் ளார்.

இன்று காலை 8.30 மணிக்கு கண்டி வீதி யில் உள்ள வை.எம்.சி.ஏயிலும் முற்பகல் 11 மணிக்கு சுண்டுக்குளி சனசமூக நிலையத் திலும் 2 மணிக்கு பாரதி சனசமூக நிலையத் திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை காலை 8.30 மணிக்கு நெடுங் குளம் பிள்ளையார் கோயிலடியிலும் 11 மணிக்கு கொழும்புத் துறை சனசமூக நிலை யத்திலும் பிற்பகல் 2 மணிக்கு கலைவாணி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்பட வுள்ளது. (ந-3)

## பிரபாவின் படம் வைத்திருந்த சிங்கள இளைஞன் கைது

பேராதனைப் பொலிஸார் கடந்த வியாழக் கிழமை சந்தேகத்தின் பேரில் சிங்கள இளை ஞர் ஒருவரைக் கைது செய்து விசாரணைக் குட்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞ ரிடம் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படங்கள், புலிகளின் விமானத் தைப் போன்ற விமானப் படங்கள் என்பன இருக்கக் கண்டு பிடித்துள்ளனர்.

இவ் இளைஞர் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரிபவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர். இவ் இளை ஞன் தொடர்பான விபரங்களைக் கண்டறிய பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-5)

## புனித பாப்பரசரை ஜனாதிபதி சந்திப்பார்

பரிசுத்த பாப்பரசரை மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இச் சந்திப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி இடம் பெறவுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. பரிசுத்த பாப்ப ரசருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் எதிர் வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள சந் திப்பில் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படு வதற்கான தீர்வுகள் எட்டப்படவேண்டுமென கிறிஸ்தவர்களின் இறைஇரங்கல் தினமான நேற்று பிரார்த்தனைகள் இடம்பெற்றுள்ளன. (ந-3)

## வேம்படி மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு

வேம்படி உயர் தரப் பாடசாலை அபிவிருத் திச் சபையின் அனுசரணையுடன் கல்லூரி யில் 2006 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி களின் சாதனையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாதாரண தரப் பரீட்சையில் 232 மாண விகள் தோற்றிச் சித்திபெற்றுள்ளனர். தமிழ், சமயம், கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடங் களில் நூறு வீத சித்தி பெற்றுள்ளதுடன் அனைவரும் உயர் தரக் கல்வி பயில்வதற்கு அனுமதி பெற்றுள்ளனர்.

மாணவிகள் கௌரவிக்கும் நிகழ்வில் அனைத்து மாணவிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத் திச் சபை உறுப்பினர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை கேட்டுள்ளார். (ந-3)

## மத்தியஸ்தர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங் கத்தில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர் கள் இலங்கை கூடைப் பந்தாட்ட சம்மேளனத் தினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள கூடைப் பந்தாட்ட ஆடுகளங்களில் மத்தியஸ்தர்களாக பணியாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களின் பெயர்கள் வருமாறு;

ஜீ.எஸ்.சாந்தீகரன், எவ்.ரி.அல்பிறட், கே.கணேசநாதன், ஜீ.டி.மதியழகன், ஏ.எஸ். டிலான், பி.ஈ.ஹென்றி, பி.குகராஜ். இவர்கள் அனைவருக்குமான அனுமதி யாழ்.கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் தலைவரினால் முன் மொழியப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ந)

பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

—திருவள்ளுவர்

வலம்புரி

## யாழ்ப்பாணத்தில் நடக்கும் புலம் பெயர்வு...

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிச் செல்லும் மக்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இவ்விதம் வெளிச் செல்பவர்கள் மீளவும் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

சுருங்கக்கூறின் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து மக்கள் புலம் பெயர்கின்றனர் எனலாம். 2006 ஆகஸ்ட் 11 ஆம் திக்தி யாழ்ப்பாணத்தையும், ஏனைய மாவட்டங்களையும் இணைக்கும் ஏ-9 பாதை மூடப்பட்டதைத் தொடர்ந்து குடாநாட்டு மக்கள் பஞ்சத்தாலும் நோயினாலும் பெரும் பாதிப்படைந்தனர்.

பொருட்களின் விலை என்றுமில்லாதவாறு பன்மடங்கு அதிகரித்தது. நோயாளர்கள் தேவையான மருந்தைப் பெறமுடியாமல் தவித்தனர். சிறுவர்,குழந்தைகளுக்கான பால்மா வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது.

இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் வாழ முடியாது என்ற முடிபை பலர் எடுத்துக் கொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறவுள்ள மக்கள் தொகை பற்றிய விபரங்களை கடந்த மாதம் 25 ஆம் திகதி வெளியான வலம்புரி தனது முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தது. எனினும் அது பற்றி எவரும் பெரிதுபடுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை.

எனினும் இப்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் புலப்பெயர்வு குறித்த நினைப்புக்கள் மெல்லத் தலைதூக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

ஏ-9 பாதை மூடப்பட்டு குடாநாட்டு மக்கள் பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாடியபோதும் யாழ்ப்பாணத்தில் வாழ வேண்டுமென்ற மன உறுதியோடு இருந்தவர்களை,யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் கொலைகள்,ஆட்கடத்தல்கள்,காணாமல் போதல்கள் ,களவு ,கொள்ளை என்பன யாழ்ப்பாணத்தில் இருக்கவே முடியாது என்ற முடிபைதீர்க்கமாக எடுக்கச்செய்துவிட்டது.

இதனால் நாளுக்கு நாள் குடாநாட்டு மக்கள் கொழும்புக்குச் செல்வதை காண முடிகிறது. அதிலும் பகல், இரவு என இரு வேளைகளிலும் நடைபெறும் கொள்ளைச் சம்பவங்கள் இருக்கக்கூடிய அற்ப சொற்ப புத்திஜீவிகளையும் வெளியேற்றி விடுவதில் அதி கூடிய பங்கேற்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறுகின்றவர்களின் தொகை புள்ளி விபரக் கணக்குகள் அனைத்தும் படைத் தரப்புக்கு நன்கு தெரிந்தவையே.

ஏனெனில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறும் ஒவ்வொருவரும் படைத்தரப்பிடம் பயண அனுமதி பெறுவது கட்டாயமானதாகும்.

எனவே யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறுவோர் தொகை ,வெளியேறவுள்ளோர் தொகை என்பவற்றின் பூரணமான தரவுகளை கொண்டிருக்கும் படைத்தரப்பு ஓர் உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் வெளியேறுவது எனக்கூறப்படும் செய்தி அவர்களின் வெளியேற்றத்தை தடுத்து நிறுத்துங்கள் என்பது அல்ல.மாறாக மக்கள் வெளியேறுவதற்கான காரணத்தை சீர்படுத்துங்கள் என்பதே ஆகும்.

கொலைகளும் கொள்ளைகளும் பசியும் பட்டினியும் விலையேற்றமும் பயணக் கஷ்டமும் ஒன்றாக-ஒரே காலத்தில் நிலவக்கூடிய பிரதேசத்தில் எந்த மக்களுமே வாழ விரும்பமாட்டார்கள்.

எனவே யாழ்.குடாநாட்டில் முதலில் அச்சமற்ற சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பதே தற்போதைய உடனடிக் கோரிக்கையாகும்.

# காணாமல் போனவர்களை கண்டறிய அனைத்துலக கண்காணிப்புக்குழு தேவை

## ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்கு அனைத்துலக கண்காணிப்புக் குழுவினர் அமைக்கப்பட வேண்டும் என்பதனை தாம் ஆதரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. கடந்த வாரம் காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பொதுமக்கள் கண்காணிப்பு குழுவின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உள்ளூர் விசாரணைகள் போதுமானதாக இருக்காது எனில் நாம் அனைத்துலக நாடுகளின் உதவிகளை பெறுவோம் என அங்கு உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்தார்.

காணாமல் போன உறவினர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஒரு சுயாதீனமான அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அமைக்கப்படவேண்டும் என பொதுமக்கள் கண்காணிப்புக் குழு, அரசாங்கம் உட்பட பல தரப்பினருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.நாம் அனைத்துலக கண்காணிப்பாளர்களை எதிர்க்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி பதவியில் இருந்தபோது எல்லாம் தெளிவாக இருந்தன. ஆனால் தற்போதைய அரசாங்கம் அனைத்துலக கண்காணிப்புக் குழு அமைக்கப்படுவதனை எதிர்க்கின்றது.

ஏனெனில் அவர்கள் பல விடயங்களை மறைக்க முற்படுகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுமக்கள் கண்காணிப்பு குழு உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அனைத்துலக மனித உரிமை கண்காணிப்பாளர்களை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஆதரிக்கின்றனர். ஆனால் இது அரசாங்கத்தினால் மீண்டும் மீண்டும் நிராகரிக்கப்பட்டு வருகின்றது. தமது உறவினர்களை கண்டுபிடிக்க முடியாது என்பதனை உள்ளூர் அதிகாரிகள் நிரூபித்து வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

அனைத்துலக மனித உரிமை கண்காணிப்பாளர்கள் மூலம் ஒரு அழுத்தத்தை கொண்டு வரலாம். அனைத்துலகத்தின் பங்களிப்பு இல்லாமல் இங்கு ஒன்றும் நடக்காது என ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் காணாமல் போன கரன் என்ற இளைஞனின் தந்தையாரான தம்பையா சிவராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஆயிரம் பேர் கடத்தப்பட்டுள்ளதாக அல்லது காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த வருடம் 81 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தொடர்பாக வெளிப்படையாக கருத்துக்களை தெரிவிக்க குடும்ப உறுப்பினர்கள் அஞ்சுகின்றனர். அவர்களுக்கு அதிகாரிகளிடம் இருந்து எந்தவிதமான உதவிகளும் கிடைக்கவும் இல்லை.

நாம் எல்லோரிடமும் முறையிட்டுள்ளோம். பொலிஸ், அரசு,அரசசார்பற்ற அமைப்புக்கள் எல்லோரிடமும் ஆனால் யாருக்கும் எதுவும் தெரியாது என கடத்தப்பட்ட மணிவரனின் சகோதரரான எஸ்.சந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

எமக்கு எமது மருமகன் திரும்பி வரவேண்டும். இவற்றிக்கு எல்லாம் யார் காரணம்? என ஏப்ரல் 4 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்ட பிரதீபனின் மாமனாரான எஸ்.பாக்கியநாதன் தெரிவித்தார். இதனிடையே மனித உரிமை மீறல்களை முடிபுக்குக் கொண்டு வரவும் விசாரணைகளுக்கு ஆதரவுகளை தேடவும் நாடுதழுவிய கூட்டங்களை நடத்துவதற்கு தாம் திட்டமிட்டுள்ளதாக பொதுமக்கள் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. (ந-5)

# அனைத்துலக விசாரணைக்குழு இலங்கையில் அமைக்கப்பட வேண்டும்

## அமெரிக்கா விருப்பம் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கையின் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம் பெற்று வரும் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் கவலையைத் தருகின்றன. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதனை அமெரிக்கா ஊக்கப்படுத்துகின்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான முழுமையான விசாரணைக்கு அனைத்துலக விசாரணைக்குழுவை அமைப்பதற்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்கும். அண்மையில் அமெரிக்காவில் வாஷிங்டன் அனைத்துலக ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசும்போது அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்திய வெளிவிவகார துணை அமைச்சகத்தூதுவர் றிச்சட் பௌச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் தீவிரமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சட்டவியல் அதிகாரிகளை இது தொடர்பாக கவனமான நடவடிக்கைகளை எடுப்பதனை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையில் இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல்கள், விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறார் படைச்சேர்ப்பு,பொதுமக்களின் பேருந்துகள் மீதான குண்டுத் தாக்குதல் என்பன கவலை தருகின்றது. இங்கே நாங்கள் இரு காரணிகளை பார்க்க வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

முதலாவதாக ஒரு ஜனநாயக நாடான இலங்கை பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவது, விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் சிறார் படைச்சேர்ப்பு, பேருந்துகள் மீதான குண்டு வெடிப்புக்கள் என்பனவாகும்.

இரண்டாவதாக அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம் பெற்று வரும் படுகொலைகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் உண்மையான விசாரணைகளை நடத்த வேண்டும். இலங்கையின் நீதித்துறையினரால் தெளிவான முறையில் நீதிவிசாரணை மேற்கொள்ளப்படவேண்டும்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான முழுமையான விசாரணைகளுக்கும் அதற்கு உறுதுணையாக அனைத்துலக விசாரணைக்குழுவை அமைப்பதற்கும் அமெரிக்கா ஆதரவு வழங்கும். இலங்கையில் இடம் பெறும் முழு அளவிலான மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் நாம் கவனத்தைச் செலுத்துவோம். எம்மால் அவதானிக்கப்படும் கடுமையான நிலைமைகள் தொடர்பாக நாம் அக்கறை கொண்டுள்ளோம் என்றார் றிச்சட் பௌச்சர்.

இலங்கையில் நடைபெற்று வந்த அமைதி முயற்சிகளில் பங்கு பற்றியவர் என்பதுடன் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுடன் பல கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனிடையே உலகில் மோதல்கள் இடம் பெற்று வரும் நாடுகளில் முன்னிலையில் நிற்கும் ஊடகவியலாளர்கள் மிகவும் கடுமையான நிலைமைகளை எதிர்கொள்கின்றனர்.

செய்திகளை சேகரிப்பதற்காக தமது உயிர்களையும் அவர்கள் இழக்கின்றனர். சில நாடுகளில் சுதந்திரம் இல்லை என்பதே உண்மை. அங்குள்ள மக்கள் முழுமையான சுதந்திரங்களை அனுபவிப்பதில்லை என அனைத்துலக ஊகவியலாளர்கள் மத்தியில் பேசும் போது அமெரிக்க வெளிவிவகார செயலாளர் கொண்டலிசா றைஸ் தெரிவித்துள்ளார். (ந-3,5)

# கடத்தல் சம்பவங்களை தடுக்கவேண்டும்—மனோகணேசன்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்தும் அப்பாவிப் பொதுமக்கள் கடத்தப்படும் சம்பவங்கள் ஆனது அனைத்துலக பிரச்சினையாகும் முன்னர் தடுக்கப்படவேண்டும் என்று மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது; பொதுமக்கள் கண்காணிப்புக் குழுவினால் கடந்த வாரம் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட எல்லாமக்களும் ஏறத்தாழ ஒரே கதையைத் தான் கூறியுள்ளனர்.தமது கணவரோ அல்லது பிள்ளைகளோ காணாமல் போயுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான பதில் தமக்குத் தேவை.

இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சில குடும்ப உறுப்பினர்கள் வவுனியாவில் இருந்து பயணம் செய்து கொழும்பு வந்திருந்தனர். நாட்டில் அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம்,உள்ளூர் மற்றும் அனைத்துலகத்தின் அழுத்தங்களுக்கு நிச்சயமாக முகம் கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகும்.

கடத்தல்கள் மனித உரிமை மீறல் தொடர்பாக பொது மக்களின் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இணைந்துள்ளது அரசாங்கத்திற்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கும்.

தனது மத மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இந்த நாட்டில் வாழ உரிமையுள்ள மக்களுக்காக நாம் பேசுகிறோம். வெள்ளை வான்கள் தற்போது வீடுகளுக்குச் செல்கின்றன. இதுதான் நாம் இலங்கையில் இருந்து எதிர்பார்ப்பதா? இது ஒரு அனைத்துலக பிரச்சினையாக உருவெடுக்கும்முன்னர் இந்த பொறுப்பற்ற தன்மை நிறுத்தப்படவேண்டும்.

அரசாங்கம் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. எமது நடவடிக்கைகள் கொழும்பையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இருந்து காணாமல் போனவர்கள் தொடர்பான சம்பவங்களுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. அது எல்லாப் பிரதேசங்களிலும் இருந்து காணாமல் போனவர்களையும் உள்ளடக்கியது என்கிறார் மனோகணேசன். (ந-5)

# வெளிநாட்டு உதவித் திட்டத்திற்கு கல்வி அமைச்சின் அனுமதி தேவை

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் கல்வித்துறை நடவடிக்கைக ளுக்காக வெளிநாட்டு நிதியுதவிகளுடன் வலய மற்றும் மாகாண மட்டத்தில் அமுல் படுத்தப்படும் வேலைத் திட்டங்கள் தொடர் பாகக் கல்வி அமைச்சின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அமைச்சின் செயலாளர் ஆரியவர்த்தன ஹேகவே பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சின் அங்கீகாரம்பெறப் பட்டு அது பற்றி உடன்படிக்கையில் கைச் சாத்திடப்பட்ட பின்னரே வெளிநாட்டு உதவித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.


இது தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன் றையும் கல்விஅமைச்சின் செயலாளர் சகல மாகாணக் கல்வி அமைச்சின்செயலாளர் கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அரசியல் யாப்பின் பிரகாரம் கல்வித் துறை மாகாண நிர்வாகத்துக்குரியதாக இருந்தாலும் வெளிநாட்டு நிதி முகாமைத் துவம் தொடர்பான விடயங்கள் மத்திய அமைச்சின்அதிகாரத்திற்குட்பட்டது என்று கல்வி அமைச்சு அந்த அறிக்கையில் சுட் டிக்காட்டியுள்ளது.

வெளிநாட்டு உதவிகளுடன் வலய மட்டத் தில் அமுல்படுத்தப்படும் சில வேலைத்திட் டங்களினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற் பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் கவனத்தி ற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆதலால் 2007 ஆம் ஆண்டு அமுல் படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் எனவும்அந்த சுற்றறிக் கையில் கோரப்படவுள்ளது.

(ந-5)



புத்தாண்டை ஒட்டி பலாலி படைத் தளத்தில் நடந்த நிகழ்வு.

## தென்பகுதியில் மின்சாரம் தடைப்பட்டது

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் நேற்று பிற்பகல் மின்சாரம் தடைப்பட்டதால் கொழும்பு உட்பட முக்கிய நகரங்கள் இருளில் மூழ்கின.

மின் பாவனையின் அதிகரிப்புக் காரண மாகவே மின்சாரம் தடைப்பட்டதாக மின்சார சபையின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித் தார்.

தென்பகுதியில் மின்சாரம் தடைப்பட்ட தனால் பொதுமக்களிடையே பயப்பீதி ஏற் பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ந-3)

## மொறட்டுவப் பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் டிப்ளோமா விண்ணப்பம்

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருட கால முழுநேர தொழில் நுட்ப வியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறிக்கு இணைந்த கணி தம், உயர் கணிதம், பௌதிகவியல், இரசா யனவியல் ஆகிய பாடங்களில் ஒரே தடவை யில் மூன்று சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக வெளியாகியுள்ள வர்த் தமானி அறிவித்தலை இன்று முதல் வலம் புரி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும்.

(ந-3)

## மங்களவை மீண்டும்...

எதிரான குற்றப்பத்திரி கைகளை அனுப்புவ தனை நிறுத்தும்படியும் ஆனால் முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சிக்கு எதிரான குற்றப்பத்திரிகைக ளை அனுப்பும்படியும் சுதந்திக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதி மகிந்த உத்தரவிட்டுள்ளார்.

கட்சியை மீள ஒருங்கிணைக்கும் இந்த முயற்சியில் சுதந்திரக் கட்சியின் பல மூத்த உறுப்பினர்கள் ஈடுபட்டு வருவதாகவும் தனது தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காக மார்ச் 26 ஆம் திகதி சிங்கப்பூர் சென்றுள்ள மங் களவை, சிறிசேன சந்திக்கக் கூடும் எனவும் கூறப்படுகின்றது.

கட்சியை மீள ஒருங்கிணைக்கும் இந்த முயற்சிகளில் எல்லே குணவன்ச தேரரும் முயற்சி செய்வதாகத் தெரிவிக்கப்பட்ட போதி லும் அவர் இது தொடர்பாக மேலதிக தகவல் களை வெளியிட மறுத்துவிட்டார்.

சுதந்திரக் கட்சியின் மூத்த பிரதித் தலை வரும் மேற்கு மாகாண ஆளுநருமான அலவி மௌலானாவும் கட்சியிலிருந்து பிரிந்தவர்களை ஒருங்கிணைக்கும் முயற்சி கள் நடைபெறுவதாகத் தெரிவித்தார்.

கட்சியின் பல மூத்த உறுப்பினர்களும் பெரும்பாலான உறுப்பினர்களும் கட்சியில் மீள ஒருங்கிணைப்புக்கள் நடைபெறும் என நம்புகின்றனர். இது தமிழ் - சிங்களப் புது வருடத்தின் பின்னர் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் மங்களவுக்கு எதிரான குற்றப் பத்திரிகைகள் ஏன் நிறுத்தி வைக்கப்பட்டுள் ளன?சிறிபதிக்கு எதிரானவை ஏன்அனுப்பப் படுகின்றன? என்ற கேள்விக்கு சுதந்திரக் கட்சி யின் ஒழுக்காற்றுக்குழுத் தலைவரும் மூத்த அமைச்சருமான ஜோன் செனவிரட்ண பதி லைத் தெரிவிக்க மறுத்ததுடன் அது கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினை எனவும் கூறினார்.(ந-5)

## பேச்சு...

கருத்துக்கள் தொடர்பாக கேட்ட போதே அமை ச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையைக் கடைப் பிடிப்பது தொடர்பில் அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளவில்லை என நோர்வேத் தரப் பினர் தெரிவித்துள்ளனர்.

இரு தரப்பினரும் பாரிய உயிர்ச்சேதங் கள் ஏற்பட்ட பின்னரே சமாதானப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வர் என தாம் நம்புவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

இந்நிலையில் இறையாண்மையுள்ள அரசாங்கத்தையும் பயங்கரவாத அமைப் பொன்றையும் நோர்வே அரசாங்கம் சம நிலையில் கருதியமை குறித்தும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அதிர்ச்சி வெளியிட் டுள்ளார்.

(ந-3)

## விடுதலைப்...

வழங்கிய நாடுகள், ராஜீவ் கொலை வழக் கில் கைது செய்யப்பட்டவர்களுக்கு தமது தகவலின் அடிப்படையில் மரண தண்டனை வழங்கக் கூடாது எனவும் கோரிக்கை விடுத் துள்ளன.

கடந்த வாரம் கொழும்புக்கு வந்த ராஜீவ் காந்தியின் கொலை வழக்குப் பற்றி இறுதிக் கட்ட விசாரணைகளை மேற்கொள்ளும் குழுவைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள், விடுதலைப்புலிகளின் வலையமைப்புப் பற்றி அரச அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

(ந-5)

## தமிழக கடற் பாதுகாப்பிற்கு...

பொருத்தி வருகின்றது.

அத்துடன் இந்தியாவுடனான கூட்டுக் கடல் ரோந்துக்கு இலங்கை வலியுறுத்தி வரு வதால் எழுந்துள்ள சிக்கல்களைச் சமாளிக் கும் வகையிலேயே இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

கடலில் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவி ரப்படுத்தியிருக்கும் இந்தியா, விமான எதிர்ப் புப் பீரங்கிகள் அடங்கிய இரண்டு போர்க் கப் பல்களையும் தமிழகக் கடற்பிராந்தியத்தில் நிலைநிறுத்தியுள்ளது.

டி-56, டி-58 என்று அழைக்கப்படும் இந்த இரண்டு போர்க் கப்பலில் அதி சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டுள்ளன. டி-56 போர்க் கப்பலில் 45 கிலோமீற்றர் தூரத்திற்குச் சென்று தாக்கக் கூடிய விமான மீற்றர் சுற்றளவான கடற்பிராந்தியத்தைக் கண்காணிக்கும் ராடர் ஒன்று பொருத்தப் பட்டுள்ளன. அத்துடன் 26 கடல் மைல் வேக த்தில் இந்தக் கப்பல் பயணிக்கக் கூடியது. கப்டன் மகாஜன் தலைமையில் 47 பேர் இந்தக் கப்பலில் பணியாற்றுகின்றனர்.

டி-58 போர்க் கப்பலில் 50 கி.மீற்றர் தூரத் திற்குச்சென்று தாக்குதல் நடத்தக் கூடிய விமான எதிர்ப்புப் பீரங்கி ஒன்றும் 150 கிலோ மீற்றர் சுற்றளவுள்ள கடற்பிராந்தியத்தைக் கண்காணிக்கக் கூடிய ராடர் ஒன்று பொருத் தப்பட்டுள்ளன.

அத்துடன் 25 கடல் மைல் தூரத்தில்இந் தக் கப்பல் பயணிக்கக் கூடியது. கப்டன் அங்கூர் மேதா தலைமையில் 56 பேர் இந் தக் கப்பலில் பணியாற்றுகின்றனர்.

இதுதவிர ஏற்கனவே தமிழகக் கடற்பிராந்

## அரசுக்கு...

கத்தின் சார்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் எஸ்.என்.சந்திர சேன, ஐக்கிய தேசியக் கட்சி உள்ள பெயரையும் கெடுத்துக் கொள்ளவே ஆயத்தம் செய்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

1988/89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இடம் பெற்றகொடூரங்களைத்தாமும்பார்த்துக்கொண் டிருந்ததாக அமைச்சர் தெரிவித்தார். (ந-3)

## பேச்சுக்களை...

விடுதலைப்புலிகளைச் சந்தித்தபோது மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக செய்திகள் வெளியாகி இருந்தன. அதற்கு அரசாங்க மும் பேச்சுக்களில் ஈடுபட விரும்புவதாகத் தெரிவித்திருந்தது.

எனினும் நாம் கண்காணிப்புக் குழுவின ருடன் ஓர் வழமையான சந்திப்பையே மேற் கொண்டிருந்தோம். நோர்வேயோ அல்லது வேறு தரப்பினரோ பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய புதிய முயற்சிகள் தொடர் பாக எம்மை அணுகவில்லை என விடுத லைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

(ந-5)

கப்பட்டுள்ளது.

கடலில் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தியிருக்கும் இந்தியா, விமான எதிர்ப்புப் பீரங்கிகள் அடங்கிய இரண்டு போர்க் கப்பல்களையும் தமிழகக் கடற்பிராந்தியத்தில் நிலைநிறுத்தியுள்ளது.

டி-56, டி-58 என்று அழைக்கப்படும் இந்த இரண்டு போர்க் கப்பலில் அதி சக்தி வாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டுள்ளன. டி-56 போர்க் கப்பலில் 45 கிலோமீற்றர் தூரத்திற்குச் சென்று தாக்கக் கூடிய விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இரண்டு, 250 கிலோ

டி-58 போர்க் கப்பலில் 50 கி.மீற்றர் தூரத்திற்குச்சென்று தாக்குதல் நடத்தக் கூடிய விமான எதிர்ப்புப் பீரங்கி ஒன்றும் 150 கிலோமீற்றர் சுற்றளவுள்ள கடற்பிராந்தியத்தைக் கண்காணிக்கக் கூடிய ராடர் ஒன்று பொருத்தப்பட்டுள்ளன.

அத்துடன் 25 கடல் மைல் தூரத்தில்இந்தக் கப்பல் பயணிக்கக் கூடியது. கப்டன் அங்கூர் மேதா தலைமையில் 56 பேர் இந்தக் கப்பலில் பணியாற்றுகின்றனர்.

இதுதவிர ஏற்கனவே தமிழகக் கடற்பிராந்தியத்தில் 2 ரோந்துக் கப்பல்கள் நிறுத்தப்பட்டு 200ற்கும் அதிகமான கடற்படையினர்பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பித்தக்கது. (ந-5)

# மரண அறிவித்தல்

## குட்டித்தம்பி திருநாவுக்கரசு நாயகம்

**(உரிமையாளர் - நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்)**



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி திருநாவுக்கரசு நாயகம் நேற்று 15.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி, தில்லையம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், ரதிமாலா (கனடா), பவானி (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

நவரட்ணம்(கனடா), உதயகுமார் (உரிமையாளர் லா பான்சி, மானிப்பாய்) ஆகியோரின் மாமனாரும், பார்வதிப்பிள்ளை (கனடா),பாலச்சந்திரன், பேரம்பலம் ஆகியோரின் சகோதரரும், நிமல்ராஜ்(கனடா), வினித்தா(கனடா), பிரசன்னா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.04.2007)திங்கட்கிழமை பகல்12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாயகபாலன் ஸ்ரோர்ஸ்,
மானிப்பாய்.
(c-007)

தகவல்
மனைவி, மகள்.

# அரசுக்கு...

கத்தின் சார்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் எஸ்.என்.சந்திர சேன, ஐக்கிய தேசியக் கட்சி உள்ள பெயரையும் கெடுத்துக் கொள்ளவே ஆயத்தம் செய்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

1988/89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இடம் பெற்றகொடூரங்களைத்தாமும்பார்த்துக்கொண்டிருந்ததாக அமைச்சர் தெரிவித்தார். (ந-3)

மும் பேச்சுக்களில் ஈடுபட விரும்புவதாகத் தெரிவித்திருந்தது.

எனினும் நாம் கண்காணிப்புக் குழுவினருடன் ஓர் வழமையான சந்திப்பையே மேற்கொண்டிருந்தோம். நோர்வேயோ அல்லது வேறு தரப்பினரோ பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய புதிய முயற்சிகள் தொடர்பாக எம்மை அணுகவில்லை என விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# ஐ.நா.படைகள்...

இவ்வாறு அரசியல் இராஜதந்திரிகள் ஆரூடம் தெரிவித்துள்ளனர். இலங்கையில் எல்லை மீறிச் செல்லும் மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்கு அனைத்துலகக் கண்காணிப்புக் குழுவை அனுப்பி அதன் அறிக்கையை பெறுவதெனவும் அதனைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பி வைப்பதுமே இலங்கை விவகாரத்தில் அக்கறையுள்ள நாடுகளின் திட்டமென கொழும்பு அரசியல் ராஜதந்திரிகள் அரசுக்கு எடுத்துரைத்துள்ளதாக இரகசியத்தகவல்கள்வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு அனைத்துலகக் கண்காணிப்புக் குழுவை அனுப்ப வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாகவிருப்பதாகவும், எனினும் அனைத்துலகக் கண்காணிப்புக் குழு தேவையற்றது எனவும் இலங்கைக்குள் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான, விசாரணைகளை உள்நாட்டு விசாரணைக்குழுக்கள் மேற்கொண்டு வருவதாகவும் இலங்கை அரசு வெளிநாடுகளுக்குக் கூறி வருகின்றது.

இருந்தும் இலங்கையில் இடம் பெறும் மனிதஉரிமை மீறல்களை தடுக்க அனைத்துலக கண்காணிப்புக் குழுவை அங்கு அனுப்ப வேண்டும் என்பது தொடர்பிலான பிரசாரங்கள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெறும் இடங்களிலிருந்து ஆரம்பித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ந)

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்புடையீர்!

**18.03.2007 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி**

## திருமதி எதிர்வீரசிங்கம் மகேஸ்வரி

அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம பிரார்த்தனையும் 17.04.2007 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மதிய போசன விருந்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

விசவத்தனை கோவிலடி,
பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.
(825)

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.